மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இத்திட்டத்திற்கான இறுதி பணி மதிப்பீடுகள் தயாரிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் இத்திட்டம் முடிவடையாமல் உள்ளது. திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை.

217—(*வினா எண் 9141)—**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையில் கரும்புக்கு, அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கொடுக்கப்படுகின்ற விலை கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது இந்த ஆண்டுக்கும் பொருந்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம், பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலையில் அலங்காநல்லூர் ஆலைப் பகுதியிலிருந்து பெறப்படும் கரும்பிற்கு மட்டும், அலங்காநல்லூர் ஆலைக்கு மாநில அரசு தரும் கரும்பு விலையான டன் ஒன்றுக்கு ரூ. 247.50 அளிக்கப்படுகின்றது.

(ஆ) இது 1985-86 அரவைப் பட்டத்திற்கு மட்டும் பொருந்தும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, 10 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற இரண்டு சர்க்கரை ஆலைகளில் ஒரு சர்க்கரை ஆலையிலே கூடுதலான விலையும் பக்கத்திலே அதே வட்டத்திலே இருக்கிற மற்றொரு சர்க்கரை ஆலையிலே வேறுவிதமான விலையும் மிகுந்த வேறுபாட்டுடன் இருப்பதற்கு என்ன காரணம்? அந்த நிலைமையைப் போக்குவதற் காக அடிப்படை விதிகள் தளர்த்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, எல்லா சர்க்கரை ஆலைகளிலும் ஒரேவிதமான விலைதான் தற்போது இருந்து வருகிறது. அந்தச் சர்க்கரை ஆலையில் விலை ரூ. 195 வீதம் மாநில அரசு நிர்ணயித்து வந்தது. அதை ரூ. 210 ஆக உயர்த்தித் தர பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால் அந்த விலை இந்த ஆண்டு மட்டும் உயர்த்தித் தரப்பட்டது.

உத்திரமேரூர் தாலுக்கா, பெருநகர் மற்றும் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

218—(*வினா எண் 9835) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்காவில் உள்ள பெருநகர் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பூர்த்தி அடைந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பெருநகர் காலனி மக்களுக்கு இத்திட்டம் பயன் அளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம்.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பெருநகர், மானாம்பதி போன்ற கிராமங்களில் தன்னிறைவுத் திட்டம் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் தற்போது நல்ல முறையிலே நிறைவேற்றித் தரப்பட்டிருக்கின்றன. காலனியில் சரியான முறையில் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதை நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன். அதோடு தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அனுமந்தாமங்கலம், ஆணிப் பண்டிகை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அதைப்போல், ஒர்க்காபேட்டை, களியாப்பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் நிறைவேற்றித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.